R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
March 2019

எழும்பிப்



பிரகாசி

சகோதரிகள் ஐக்கிய கூட்டம் கெத்சமனே தோட்டம்

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Thursday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 | மார்ச் 2019 | கனி 4



கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV

**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.








**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 223

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. கர்த்தர் ஆறாம் வருஷத்தில் இஸ்ரவேலருக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம்பண்ணும்போது அது அவர்களுக்கு எத்தனை வருஷத்தின் பலனைத் தந்தது?
2. உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடின கோராகின் கூட்டத்தார் எத்தனை பேர்?
4. நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு என எந்த சபையின் தூதனுக்கு எழுதப்பட்டது?
5. நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக அதை சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய் அது எதற்குள்ளானது?
6. ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்தவனா?
7. உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர் என்று சொன்ன பெண் யார்?
8. எருசலேம் நகரத்தார் யாவரும் யாரிடத்திற்குப்போய் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார்கள்?
9. மீதியானியர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள் அப்பொழுது தேசமானது யாருடைய நாட்களில் 40 வருஷம் அமைதலாயிருந்தது?
10. உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன் என்றவர் யார்?

## வேதாகம ஆய்வு... 8

### அத்தேனே

1. கிரேக்க தேசத்திலுள்ள விசேஷமான பட்டணம்.
2. இது துறைமுகத்திலிருந்து மூன்று மைல் தூரம்.
3. உயர்ந்த பல மேடைகள் இருந்தன.
4. 'மார்ஸ் மேடை' என்ற ஒரு இடம் இருந்தது – அப்.17:15–34
5. இப்பட்டணம் நாகரீகத்திலும் படிப்பிலும் விசேஷித்தது.
6. பவுல் இங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.
7. தியொனீசியு அங்குள்ள சபையில் கண்காணி.




Athens

## பேலியாளின் மக்கள்

சிறுவர் பகுதி

வேதபகுதி: 1சாமுவேல் 2:12-17

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலிஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர்! அதைப்போல ஏலி ஆசாரியன் பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடத்திய விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா, உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக் கூடியவர்கள்கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. நீங்கள் இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து, ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:** **“மாறுபாடுள்ள இருதய முடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்” (நீதி.11:20).**


**FORM IV**

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer`s Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai St., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher`s Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor`s Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:28.02.2019 Signature of Publisher.





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 19 மார்ச் -2019 கனி - 4


ஆசிரியருரை

## நீ பூமியில் உயிரோடிருக்குங்காலத்தில்...
## When You Live In The World...



இந்த பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? பூமியில் மனிதனுடைய வாழ்நாள் குறுகினதாயிருக்கிறது. அந்த குறுகின நாட்களில் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். வேதாகமத்தில் ஒரு ஐசுவரியவானைப் பற்றி படிக்கிறோம். "அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்" (லூக்.16:19). இவன் மற்றவர்களைப் பற்றி கவலைப்படவில்லை. தனக்கு எல்லாம் இருக்கிறது என்று சொல்லி அவைகளை அநுபவித்தான். வாசலிலே கிடக்கும் தரித்திரன் லாசருவை அவன் கண்டுகொள்ளவில்லை. இன்றைக்கு இவனைப்போல இருக்கக்கூடியவர்கள் அதிகமானோர் இப்பூமியில் வாழ்ந்துகொண்டிருகிறார்கள். ஒருவேளை அவர்களில் ஒருவனைப்போல நீங்களும் வாழ்ந்துகொண்டிருக்கலாம். உங்களிடத்தில் உள்ள பொருள்கள் அனைத்தும் தேவன் கொடுத்த பொருட்களே. அது என்னுடையது என்று சொல்ல ஒருவருக்கும் அதிகாரமில்லை. ஏனெனில் வானமும் பூமியும் கர்த்தருடையது என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். இவைகளை பிதாவாகிய தேவன் சிருஷ்டித்தார். அவர் ஒன்றுமில்லாமையிலிருந்து இவைகளை உண்டாக்கினார். நாம் ஒரு வீட்டைக்கட்டுகிறோம் என்றால் மணல் கல் மரம் இவைகளைக் கொண்டு கட்டுகிறோம். இவைகளை வேறொரு இடத்திலிருந்து பெற்று ஒன்றுசேர்த்து கட்டுகிறோம். ஏற்கனவே உண்டாக்கப்பட்ட ஒன்றை வைத்து ஒன்றை உருவாக்குகிறோம். இதில் நாம் தேவனுக்கு மேலானவர்கள் அல்ல. ஆகையால், ஒருவன் இல்லாதவனாயிருந்தால் அது அவனுடைய பாடு எனக்கென்ன எல்லாம் இருக்கிறது, கடவுள் என்னை ஆசீர்வதித்து வைத்திருக்கிறார், எனக்கு ஒரு குறைவுமில்லை என்று சொல்லி பிறனுக்கான காரியங்களைப் பற்றி கவலை கொள்ளாதவர்களாக, தன்னுடைய காரியங்கள் நிறைவானால் போதும் என்று தனக்காகவே வாழ்ந்துகொண்டிராமல் மற்றவர்களையும் கண்ணோக்கிப்பார்க்கவேண்டும்.

லாசரு என்ற ஒரு தரித்திரன் பருக்கள் நிறைந்தவனாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, ஐசுவரியவானுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் அவன் பருக்களை நக்கிற்று. இந்த லாசரு தீமைகளை பூமியில் அநுபவித்தான். அவனால் மற்றவர்களுக்கு உதவ முடியவில்லை. ஆனால் தன் பருக்களை நக்கும்

நாய்களை அவன் விரட்டவில்லை. ஒருவகையில் லாசருவினால் நாய்கள் பயனடைந்திருக்கிறது. இன்றைக்கு நாம் அநுதினமும் சாலையோரங்களில் லாசருவைப்போல கிடக்கும் எத்தனையோ மனிதர்களைப் பார்க்கிறோம். ஆனால் நம்மால் உதவ முடியவில்லை. போகவேண்டிய இடத்திற்கு போய்ச்சேர தாமதமாகி விடும் என்பதால் தரித்திரர்களைக் கண்டும் உதவாமல் போய்விடுகிறோம். சிலர் உதவ மனமில்லாமல் இவன் என்ன கொடுமை செய்தானோ, இப்படி அலைகிறான் என்று கேவலமாக அவனைப்பற்றி பேசிவிட்டு கடந்துசெல்வார்கள். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் அநுதினமும் காண்கிறோம். உன்னைப்போல உள்ள ஒருவனைக் கண்டு அவனுடைய கஷ்டத்தில் நீ உதவாமற்போனால் நீ இந்த பூமியில் இருந்து வேறு என்ன செய்யப்போகிறாய்? "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" (யாக்.2:15-17). உனக்கு பூமியிலே விசுவாசம் இருந்தும் அது கிரியைகளில்லாதிருந்தால் செத்தது என வேதம் சொல்லுகிறது. உலகத்திலே உண்டாக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஏதோ ஒருவகையில் பயன்படுகிறது. பயன்படாத பொருள் ஒன்றுமில்லை. நீ மற்றவர்களுக்கு ஏதாவது ஒருவகையில் பயன்படவேண்டும்.

உனக்காகவே நீ வாழ்ந்துகொண்டிருப்பாயானால் உன் நிலைமை என்னவாகும்? சற்றே யோசித்துப்பார். பூமியிலே சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்த ஐசுவரியவான் மரித்து பாதாளத்திற்கு கொண்டுசெல்லப்பட்டான். "பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (லூக்.16:23). தனக்காகவே வாழ்ந்துகொண்டிருந்த ஐசுவரியவானை பாதாளம் விழுங்கினது. அங்கே அவன் வேதனைப்பட்டான். பூமியிலே வேதனையை அநுபவிக்காதவன், பாதாளத்திலே வேதனையை அநுபவிக்கிறான். சிலர் சொல்லுவார்கள் எனக்கு ஒரு நோயும் வந்ததில்லை, ஒரு நாள்கூட நான் ஊசி போட்டதில்லை என்பார்கள். இப்படிசொல்லுகிறவர்கள் தாங்கள் ஒரு நீதிமான் என்றும் யாருக்கும் எந்த கெடுதலும் செய்யவில்லை ஆகையால் எனக்கு ஒன்றும் வராது என்பதை மனதில் வைத்து இப்படிச்சொல்லுவார்கள். லாசரு ஒரு பாவியா? அல்லது அவன் அநேகரை வஞ்சித்தானா? அதுபற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் அவன் ஒரு தரித்திரனாக இருந்தான் என்று படிக்கிறோம். "திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ; பசியாயிருப்பீர்கள். இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள்" (லூக்.6:25). இவ்வசனத்தைப் படிக்கும்போது நமக்கு நிச்சயமாக பயம் ஏற்படும். ஏனெனில் எல்லாவற்றிற்கும் ஒரு காலம் உண்டு. வசதிபடைத்தவர்கள் வசதிபடைத்தவர்களாகவே இருக்கப்போவதில்லை, அதைப்போல ஏழையாய் இருக்கிறவர்கள் ஏழையாகவே இருக்கப்போவதில்லை. உலகம் சுற்றிக்கொண்டிருப்பதைப்போல, இரவுபகல் வருவதைப்போல மாறுபடும். இப்பூமியில் நகைக்கிறவர்கள் ஒரு நாளில் துக்கப்பட்டு அழுவார்கள் அதில் சந்தேகமில்லை. திருப்தியாக இருக்கிறவர்கள் ஒருநாளில் பசியாயிருப்பார்கள். ஐசுவரியவான் அந்தவிதமாக பாதாளத்திலே வேதனையை



**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்
ஆம் எனில் ☑ குறியிடவும்




**6. தேவன் விக்கிரகாரதனையை ஏற்றுக்கொள்வாரா?** *தற்சோதனை பகுதி - 6*

1. யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்... ☐ வசன ஆதாரம் -
------------------------------------------------------------
2. அவர் நினைவாக ஒரு சொருபத்தை வைக்கலாம் ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
3. வான சேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை... ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
4. தேவன் படைத்தவைகளை கும்பிடுவது நல்லது ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
5. அழிவில்லாத தேவனுடைய மகிமையை... ஒப்பாக ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
6. தேவனுக்காக ஒரு விக்கிரகத்தை உண்டுபண்ணுங்கள் ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
7. உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லை ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
8. எந்த ஒரு விக்கிரகமும் தேவனுக்கு ஒப்பானது ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
9. முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிர... ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------
10. தேவனை எப்படி ஆராதனை செய்தாலும் ஏற்றுக்... ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

## இன்றே தீர்மானிக்கும் நாள்
## Today Is Decision Time
(1இரா.18:17-39) பாடம் - 31 *-Jerry*




- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

14. கிறிஸ்து சொன்னார்.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது (மத்.6:24).

15. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (1யோவா.2:15).

16. நாம் தேர்ந்தெடுக்க இரண்டு இடங்களே உள்ளது. ஒன்று இடுக்கமும் குறுகலுமான வழி அல்லது விசாலமான சாலை (பாதை) கர்மேல் மலையின் மீது இப்போது தீர்மானிக்கும் நேரம். இது நமக்கும் தான்.

17. நாம் ஏன் அலைகிறவர்களாய் இருக்கிறோம்?

நல்ல நோக்கங்களில் கிடைக்கிற பொய்யான சுகங்களால்.

அ). கதை - சபை அங்கத்தினர் ஒருவர் பிரசங்கியார் பாடம் நடத்தும்போது வந்தால் அவருடைய பொருத்தமற்ற நடத்தையால் குடும்பமும் பிரிகிறது. இறுதியாக அவர் உரத்த சத்தமாய் நான் இன்றும் மேன்மையாக செய்ய நினைத்தேன் அதற்கு ஏதோ கொஞ்சம் நல்லதில்லையா?

ஆ) இல்லை. உண்மையில் அப்படியல்ல செய்யும்படியாக நினைப்பதற்கும் செய்யும் படியாக எண்ணுவதற்கும், உண்மையில் செய்வதற்கும் பெரிய வித்தியாசமுண்டு.

இ) முதுமொழி: நரகத்திற்கு செல்லும் பாதை நல்ல நோக்கங்களோடு தான் போடப்பட்டுள்ளது.

நாம் இன்னும் அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவராக வேண்டுமென்று சொல்கிறோம்.

நம்முடைய வேதத்தை இன்னும் அதிகம்படித்து அதிகமாக ஜெபிக்க வேண்டுமென்று நினைக்கிறோம்.

தொழுகைகளில் இன்னும் ஒழுங்காக கலந்து கொள்ள நினைக்கிறோம் இன்னும் பல.

ஈ) வெறும் நல்ல நோக்கங்கள் மட்டுமே போதாது.

ஆதலால் ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாகும் (யாக்.4:17)

வெறும் நோக்கம் மட்டுமே கொண்டிருப்பது பாவம். நமக்குச் சரியென்று தெரிவதை நாம் செய்யவேண்டும்.



அநுபவித்துக்கொண்டிருந்தான். இந்த ஐசுவரியவானைப்போல மற்றொரு வசதிபடைத்தவனை ஆண்டவர் இயேசு தம்முடைய உவமையில் குறிப்பிட்டுள்ளார். "ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு; ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்" (லூக்.12:16-20). தனக்காகவே சேர்க்கிறவனுடைய நிலைமை இப்படியே முடியும்.

அந்த ஐசுவரியவானுடைய முடிவு என்னவானது? அவன் எங்கேயிருந்தான்? இந்த பூமியிலே வாழ்ந்துகொண்டிருக்கிற உங்களுடைய முடிவு என்னவாகும்? நீங்கள் எங்கே இருப்பீர்கள்? இதைக்குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? ஐசுவரியவான் அக்கினிஜுவாலையில் வேதனைப்பட்டான். "அவன்; தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்" (லூக்.16:24). ஆபிரகாமுக்கு ஐசுவரியவானும் மகன்தான், லாசருவும் மகன்தான். லாசரு இப்பொழுது ஆபிரகாமுடைய மடியில் இருக்கிறான். ஆனால் ஐசுவரியவானோ அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறான். அவன் கேட்பதெல்லாம் ஒரு லிட்டர் தண்ணீரோ அல்லது ஒரு டம்ளர் தண்ணீரோ அல்ல லாசருவின் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து தன் நாவை குளிரப்பண்ணவேண்டும் அவ்வளவுதான். அப்படியானால் அந்த ஐசுவரியவான் அக்கினிஜுவாலையில் எந்த அளவு நாவறண்டுபோயிருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள். அதுமாத்திரமல்ல வரக்கூடாத இடத்துக்கு வந்துவிட்டோம் என்பதை எண்ணினான். ஆகையால் அவனுக்கு புத்தி வருகிறது; ஆபிரகாமை நோக்கி: "தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி அவன்போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்" (லூக்.16:27,28). சில பெற்றோர் தங்களுடைய ஐந்து பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான வீட்டை கட்டிகொடுத்திருப்பார்கள். அவர்கள் சண்டையிடாமல் ஒன்றாயிருக்க. நான் சில ஊர்களில் அந்த விதமான வீடுகளைப்பார்த்திருக்கிறேன். இந்த ஐசுவரியவானுக்கும் ஐந்து சகோதரர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களும் இவனைப்போல உள்ளவர்கள் தான் இவனுடைய பேச்சிலிருந்தே தெரிகிறது. அவர்களும் இந்த இடத்திற்கு வந்துவிடாமல் இருக்க அவர்களுக்கு சாட்சியாக லாசருவை அனுப்பும் என்று கேட்கிறான். பூமியில் உயிரோடிருந்த காலத்தில் சற்றும் திரும்பிப் பார்க்காதவன், அவனைப் பார்த்தாலும் மூக்கைப் பொத்திக்கொண்டு அந்த வழியாக கடந்துசென்றவன். இப்பொழுது லாசருவின் நுனிவிரலினால் நாவை குளிரப்பண்ண தண்ணீர் கேட்கிறான். செய்தி அனுப்ப ஆபிரகாமை நோக்கி

மன்றாடுகிறான். அவன் தான் எங்குஇருக்கிறோம் என்பதை அறியாமற்பேசிக் கொண்டிருந்தான்.

இதை அறிந்த ஆபிரகாம் "அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். மேலும் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்றான். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே ஒருவன் மரித்தோரிலிருந்து எழுந்துபோனாலும் இப்பூமியில் உள்ளவர்கள் நம்பமாட்டார்கள். ஆகையால் நீ என்ன நிலைமையில் இருக்கிறாய். மற்றவர்களை கண்ணோக்கிப் பார். உன்னால் முடிந்த உதவியை மற்றவர்களுக்கும் செய்யும்படியாக முயற்சிசெய். "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பெய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று வெளிப்படுத்தின விசேஷம் 21-ம் அதிகாரம் 8-ம் வசனத்தில் படிக்கிறோம். இந்த அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு உன்னைத் தப்புவித்துக்கொள்ள நீ காண்கிற சகோதரனுக்கோ, அல்லது சகோதரிக்கோ உன்னை ஒழிக்காது அவர்களுடைய தேவையை அறிந்து அவர்களுக்கு உன்னால் முடிந்த உதவியைச் செய். தேவன் உன்னிடத்தில் இதை எதிர்பார்க்கிறார். **உலகத்தில் உள்ள அனைத்தும் ஏதாவது ஒருவகையில் மற்றவர்களுக்கு பயன்பட்டுக்கொண்டிருக்கும்போது நீ பயன்படாமல் உனக்குத்தானே பயனாக இருந்தால் முடிவில் நீ யாருக்கும் பயன்படாமற்போவாய்** உன்னுடைய எண்ணத்தையும், முடிவையும், தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடு. அப்பொழுது நீ ஆபிரகாமின் குமாரனாக விசுவாசப்பிள்ளையாக இருப்பாய்.

**பூமியில் உயிரோடிருக்குங்காலத்தில் ஆவிக்குரிய மனிதனுக்கு கிடைக்கும் பாக்கியம் என்ன?**

"ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுண்டு, ஆவிக்குரிய சரீரமுண்டு அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர் மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப் பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி.15:44-52). இந்த பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள நீங்கள் கர்த்தருடையவர்களாக மாறுங்கள். நீங்கள் கர்த்தருடைய சுவிசேஷ வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அந்த பாக்கியத்தை பெற்று ஆவிக்குரியவர்களாக மாற்றப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவில் பாபா அணு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
   அ) கொல்கத்தா ஆ) டெல்லி இ) மும்பை
2. ரிக்டர் அளவுகோல் எதை கணக்கிட பயன்படுகிறது?
   அ) காற்றின் அழுத்தம் ஆ) நிலநடுக்கத்தின் அதிர்வுஅளவு இ) காற்றின் அழுத்தம்
3. எந்த பருவத்தில் வாயு மண்டலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும்?
   அ) பருவக்காற்றுக்காலம் ஆ) இலையுதிர்காலம் இ) மழைக்காலம்
4. இந்தியாவில் உடன் கட்டை ஏறும் பழக்கத்தை தடுக்க சட்டம்கொண்டு வந்தவர் யார்?
   அ) வில்லியம்பென்டிங்பிரபு ஆ) கர்சன்பிரபு இ) இர்வின்பிரபு
5. ஆகாயவிமானம் எந்திரப்படகுகளின் வேகத்தை கண்டுபிடிக்க உபயோகிக்கப்படும் கருவிஎது? அ) ஸ்பீடோமீட்டர் ஆ) ஓடோ மீட்டர் இ) டாக்கோமீட்டர்

**விடைகள்:**
1. மும்பை 2. நிலநடுக்கத்தின் அதிர்வு அளவு 3. பருவக்காற்றுகாலம்
4. வில்லியம்பென்டிங்பிரபு 5. டாக்கோமீட்டர்



Contact Us: 94435 58041

**JOIN OUR**

**WORLD EVANGELISM BIBLE SCHOOL**

**RIGHT NOW**


## வாசகரின் கடிதம்....

**இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கூத்தூர் சகோதரி B.ஸ்டெல்லாம்மா எழுதும் கடிதம்.**

**என் ஆவிக்குரிய தகப்பன் B.அர்ஜீனன் அவர்களுக்கு உங்கள் செய்தி மிகவும் பயன் உள்தாக இருந்தது. என்வயது 67 இந்துவிலிருந்து இரட்சிக்கப்பட்டவள். ஜெபம்பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது தான் அவசியம் என நினைக்கிறோம். அதற்கு அழகாக Betty சகோதரி பைபிலிலிருந்து விளக்கம் கொடுத்து இருந்தார்கள். அவர்களுக்கு என் ஸ்தோத்திரங்களையும் வாழ்த்துக்களையும் கூறிவிடுங்கள்.**

**இப்படிக்கு,**
**B.ஸ்டெல்லாம்மா**

## ஜெபியுங்கள்

- இம்மாதம் திருச்சியில் நடைபெறும் கூட்டங்களுக்காக...
- நமது மாத இதழின் வளர்ச்சிக்காக...
- புதிய வாசகர்களுக்காக...
- சுகவீனமான சகோதர, சகோதரிகளுக்காக...
- பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக...
- வரப்போகும் புதிய ஆட்சிக்காக...
- மழைக்காகவும், குடிதண்ணீர் தட்டுப்பாடு நீங்கவும்...



42. Mrs. ராஜம்மாள் - சென்னை
43. S. லதா - தேனி
44. P. சந்திராடேனியல் - நஞ்சான்குளம்
45. Miss. சாந்தாதேவி - தேனி
46. Mrs. மீனா முருகன் -ஜேடர்பாளையம்
47. E. ஜாய்ஹெலன்புனிதா - சென்னை
48. E. அதிசயம் - பனைகுடி
49. N. ஜெபத்தாய் - நாசரேத்
50. Mrs. எபிநேசர் எட்வர்டு - கடலூர்
51. S. செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
52. Mrs. பியூலாஜேசுராஜன் - பாண்டி
53. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி
54. Mrs. இந்திராஜெபக்கனி - நாசரேத்
55. Mrs. தேவதாதேவப்பிரியம் - சென்னை
56. Mrs. ரூத் ஜெயராணி அன்புராஜ்- திருநெல்வேலி
57. M. இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
58. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
59. K.M. சாந்தி - வாடிப்பட்டி

42. Mrs. கெத்சிசெல்வின் - சென்னை
43. Mrs. இந்திராஜெபக்கனி - நாசரேத்
44. N. கமலவேனி - சென்னை
45. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ்- திருநெல்வேலி
46. J. விக்டர்சுவிசேஷமுத்து - தூத்துக்குடி
47. Mrs. சாந்தாபழனி - தருமபுரி
48. J. இளவரசி ஜோபிதா - கோவை
49. G. பூங்கோதை - கோபி
50. Mrs. பாலின்டேனியேல் - சென்னை
51. J.S. ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
52. Mrs. சுசிலாராஜசிங் - திருநெல்வேலி
53. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
54. Mrs. ஜெமிநல்லையா - கோவை
55. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி
56. S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
57. Mrs. ராஜம்மாள் மானோகரன் - சென்னை
58. D. தேவபுஸ்பம் - நாசரேத்
59. B. ஸ்டெல்லாம்மா - கூத்தூர்

❒ நாடு முழுவதும் உள்ள ரியல் எஸ்டேட் நிறுவனங்களில், 95 சதவீத நிறுவனங்களிடம் பான் எண் இல்லை என்று சிஏஜி தெரிவித்துள்ளது.

❒ 12–ஆம் வகுப்பு முடிக்கும் மாணவ, மாணவியரின் வேலைவாய்ப்பிற்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில், வரும் கல்வியாண்டு முதல் 12 புதிய பாடப் பிரிவுகள் இணைக்கப்பட உள்ளதாக தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அறிவித்துள்ளார்.

❒ உலகின் மிகப்பெரிய விமானம் என்று பெருமை பெற்ற சூப்பர் ஜாம்போ ஏ380 டபுள்டெக்கர் விமானங்களை ஏர்பஸ் நிறுவனம் தயாரித்து வழங்குகிறது.

❒ சண்டிகரைச் சேர்ந்த விமான லெப்டினென்ட் ஹினாஜெய்ஸ்வால் முதலாவது பெண் விமானப் பொறியாளராக இந்திய விமானப் படையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

❒ பாகிஸ்தானில் தீவிரவாத நடவடிக்கைகள் பெருகி வருவதால் அந்நாட்டுக்கு செல்வதை அமெரிக்க மக்கள் தவிர்க்க வேண்டுமென அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**நடப்புச்செய்திகள்**

**தெரிந்துகொள்வோம்** *-K.R.K.Ravi Asir*

▶ சிங்க எறும்புகள் என்ற ஒருவகை எறும்புகள் சிறு தும்பியைப் போல் இருக்கின்றன.

▶ அலெக்சாண்டர் டூமாஸ் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை 1200. இவர்தான் உலகிலேயே மிக அதிகமான நூல்களை இயற்றியவர்.

▶ ஆஷாபூர்ணா தேவி என்பவர்தான் முதன் முதலில் ஞானபீட விருது பெற்ற பெண்மணி ஆவார்.

'தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள் அல்லது 9443558041 என்ற எண்ணுக்கு SMS அனுப்புங்கள்



## நாம் ஏன் மனசாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை

## Why We do not Accept The Conscience As A Safe Guide *-J.C.Choate*



மனசாட்சி என்ற வார்த்தையானது மனிதனுடைய இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் கிரியை செய்யக்கூடியதாகும். இதன் பொருள், காரியங்கள் சரியானதா அல்லது தவறானதா என்று தீர்மானிக்கும்படிக்கு மற்றவைகளோடு ஒப்பிட்டு பார்க்க உதவுகின்ற தகவல் மற்றும் அறிவு போன்றவற்றின் ஒரு குறிப்பிட்ட முடிவினை ஒருவன் சேகரித்திருக்கின்றதாகும். ஒருவேளை அந்த தகவல், சரியானவைகளைச் சார்ந்த அல்லது தவறானவற்றைச் சார்ந்த அறிக்கைகளாக இருக்கலாம். இது சரியா அல்லது தவறா என்ற அக்கறையில்லாமல், இது சரியானதாக ஒத்துக்கொள்ளப்பட்டு பிறகு ஒரு வழிகாட்டியாக பயன்படுத்தப்படலாம். மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக செயல்படுகிறது என நினைக்கின்றவர்கள் இருக்கின்றனர். மற்றவர்கள் நல்மனசாட்சியை கொண்டிருப்பதைக் குறித்து பேசுகின்றனர், மேலும் அவர்கள் நல்மனசாட்சியுடையவர்களாயிருப்பதினால், இது தன்னில் தானே சரியானவற்றை உருவாக்குகிறது என நினைக்கின்றனர். இருப்பினும், ஆனால் ஒருவன் தான் சத்தியத்தைப் பெற்றுவிட்டதாகவும், நினைத்துக்கொண்டிருக் கிறவனாக வஞ்சிக்கப்பட்டவனாயிருக்கலாம். இவனுடைய நல்மனசாட்சி பிறகு சத்தியத்தின் மீது அடித்தளமிடாமல் தவறானவற்றின் மீது அடித்தளமிட்டதாக இருக்கிறது. ஆகவே தான் ஒன்றினை சரியா அல்லது தவறா என்று தீர்மானிப்பதற்கு தன்னுடைய மனசாட்சியை முடிவான பிரதானமாக செயல்பட அனுமதிக்கக்கூடாது.

மனசாட்சி எவ்வாறு செயல்படுகிறது என மேலும் விளக்கமளிக்க, ஒரு சிறு பிள்ளையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள் அந்த சிறு பிள்ளையாண்டான் தன்னுடைய பெற்றோர்களால் திருடுவது தவறானது அல்லது தனக்குரியதல்லாத ஒன்றினை எடுத்துக்கொள்வது தவறானது என போதிக்கப்படுகிறான். அவன் தன்னுடைய பெற்றோர்களிடம் இருக்கும் காலமெல்லாம் தொடந்து இவ்வாறு போதிக்கப்படுகிறான். ஏனென்றால் அவன் தன்னுடைய பெற்றோர்களை கனப்படுத்துகிறான். இதனையே மற்ற நேர்மையான பெற்றோர்கள் போதிக்கின்றனர், கட்டளையும் இதனையே கூறுகிறது, உண்மையுள்ள வனாயிருக்கும்படி அவன் இதை ஏற்றுக்கொண்டு வளருகிறான். ஆனால் ஒரு நாள் தான் வைத்துக்கொள்ள விரும்பின ஒன்றை நண்பனுடைய வீட்டில் அவன் காண்கிறான் என நினைத்துக்கொள்ளுங்கள் அவன் தன்னுடையதல்லாத ஒன்றை எடுத்துக்கொள்வதற்கு சோதிக்கப்பட்டு அதை எடுத்துக்கொள்கிறான். ஏனென்றால் அவன் தான் போதிக்கப்பட்டவற்றிற்கு விரோதமாக செயல்பட்டு கொண்டிருக்கிறான், அவனுடைய மனசாட்சி அவனை கஷ்டப்படுத்துகிறது. இறுதியாக அவன் தான் எடுத்துக்கொண்ட அந்தப்பொருளை திருப்பிக்கொடுத்துவிட கட்டாயப்படுத்தபடுவதாக உணருகிறான். ஆனால் இதே காரியம் தவறாகப் போதிக்கப்பட்டிருக்கிறவனுக்கும் சொல்லப்பட்டிருக்கலாம். இருந்தபோதிலும், இது தவறு அல்லது ஏதோ பிழை. உண்மையாயிருக்க போதிக்கப்பட்டிருக்குமானால், பிறகு இது உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, ஒருவன் சத்தியமுள்ளவனாயிருப்பதற்கு எப்படிப் போதிக்கப்பட்டிருக்கிறானோ அவற்றிற்கு எதிராக அவன் செயல்பட்டால், அவனுடைய மனசாட்சி அவனை கஷ்டப்படுத்துகிறது.

பின்பு, ஒருவனுடைய மனசாட்சி நம்பத்தகுந்ததாயிருக்க வேண்டுமானால் அது சத்தியத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும். வேறுவிதமாக சொல்வோமானால், சத்தியம் அதாவது, தேவனுடைய வார்த்தை மனசாட்சியை ஆளுகை செய்யவேண்டும். ஒருவனுடைய மனசாட்சி வஞ்சகத்தாலும் அல்லது தவறானவற்றினாலும் அஸ்திபாரம் போடப்பட்டிருக்குமானால், அந்த மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக கருதப்படமுடியாது.

நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் பேசிக்கொண்டிருக்கிறவற்றிற்கு சவுல் ஒரு சிறந்த மாதிரி என்பதைக் காணலாம். முதலாவதாக, சவுல் ஒரு யூதன் என்பதையும், அவன் யூத சமயத்தைப் பின்பற்றினவன் என்பதையும், தன்னுடைய சமயத்திற்காக மிகுந்த வைராக்கியங் கொண்டவன் என்பதையும், மேலும் கிறிஸ்தவம் அவனுடைய சமயத்தின் விரோதியாய் இருந்தது என நினைத்தான் என்பதையும் சிந்தியுங்கள் இதன் விளைவாக, அவன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் பொருட்டுச் சென்றான். நாம் அவனைக் குறித்து இவ்விதமாக வாசிக்கிறோம்: ‘‘சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்’’ (அப்.8:3). தொடர்ந்து நாம், ‘‘சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய், இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்’’ (அப்.9:1,2) என வாசிக்கிறோம். இச் சம்பவம் தொடர்கையில், கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகும்போது சவுலும் அவனுடைய கூட்டாளிகளும் தமஸ்குவுக்குப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தனர். பிறகு, "அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது; சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்; நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர். நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்’’ (அப்.9:4-6) என நாம்வாசிக்கிறோம். அனனியா என்னும் பேருள்ள ஒரு சுவிசேஷப் பிரசங்கி எவ்வாறு அவனிடத்தில் வந்து, எழுந்து அவனுடைய பாவங்கள் கழுவப்படும் பொருட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அவன் சொல்லுகிறதையும் வேதவாக்கியம் தொடர்ந்து குறிப்பிடுகிறது (அப்.22:16). இப்போது சவுல் என்ன செய்தான்? அவன் கிறிஸ்துவின் விசுவாசியாக மாறினான், தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பினான், கிறிஸ்துவை கர்த்தராக ஏற்றுக்கொண்டான், பிறகு அவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். இதைச் செய்ததும், அவன் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான் (அப்.9:20) என்று வேதம் சொல்கிறது.

இப்போது இந்த மனிதனைப்பற்றி யோசித்துப் பாருங்கள். இவன் யூத சமயத்திற்காக மிகவும் உண்மையுள்ளவனாகவும், வைராக்கியமுள்ளவனாகவும் இருந்தான். இவன் கிறிஸ்தவத்திற்கு விரோதமாக கிறிஸ்தவ புருஷர்களையும், ஸ்திரீகளையும் துன்புறுத்தினான். ஆனால் தீடீரென்று கிறிஸ்துவின் விசுவாசியாக மாறி, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவனாக, கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான். அதுமாத்திரமல்ல, மீதமுள்ள தன்னுடைய வாழ்நாட்களை



## வேத அறிவுப்போட்டி 220–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. துதியாது, போற்றாது | - ஏசா.38:18 |
| 2. ஆவியினால் | - எபே.5:18 |
| 3. சிதறடிக்கப்பட்டது | - எரே.10:21 |
| 4. மாசற்றபிள்ளைகளுமாய் | - பிலி.2:15 |
| 5. எசேக்கியேல் | - எசே.18:31 |
| 6. கிறிஸ்துவுக்குள் | - கொலோ.1:19 |
| 7. பெல்ஷாத்சார்ராஜா | - தானி.5:1 |
| 8. தெசலோனிக்கே சபையார் | - 1தெச.1:6 |
| 9. எப்பிராயீமர் | - ஓசி 7:14 |
| 10. தீமோத்தேயுவை | - 1தெச.3:5 |

## வேத அறிவுப்போட்டி 221–ன் விடைகள்

| | |
|---|---|
| 1.இறங்கப்பண்ணுவேன் | - ஆமோஸ்.9:2 |
| 2. ஆம் | - 2தெச.3:6 |
| 3. யோனா | - யோனா.2:6 |
| 4. நல்ல | - 1தீமோ.3:1 |
| 5. எழும்புகிறார்கள் | - மீகா 7:6 |
| 6. பவுல் | - 2தீமோ.4:8 |
| 7. நினிவே | - நாகூ.3:16 |
| 8. ஜாக்கிரதையாயிருக்க | - தீத்து.3:8 |
| 9. தன் வலைக்குப் | - ஆபகூ.1:16 |
| 10. பிலேமோனுக்கு | - பிலே.8 |

## வேத அறிவுப்போட்டி எண் 220ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 2. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 3. B. ஞானதீபம் ஜெயராஜ் | - இடையான்குடி |
| 4. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 5. Mrs. ஜாய் மேத்யூ | - வி.கே.புரம் |
| 6. Mrs. ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 7. S. ஜாய் சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 8. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 9. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 10. Tmt. மரகததிரவியம் | - கோம்பை |
| 11. Mrs. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 12. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 13. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 14. E. ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 15. Tmt. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 16. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 17. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 18. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 19. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 20. T. ராஜாத்தி | - கோம்பை |
| 21. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 22. K. ராணி | - தூத்துக்குடி |
| 23. Mrs. ஞானம் பிலிப் | - கோவை |
| 24. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 25. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 26. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 27. S. கண்ணம்மாள் | - கோவை |
| 28. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 29. Mrs. அண்ணம்மாள் | - தூத்துக்குடி |
| 30. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 31. J. ஜாய்கமலம் | - நாசரேத் |
| 32. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 33. Mrs. மேரிநிர்மலா | - மதுரை |
| 34. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 35. R. ஞானசிரோன்மணி | - சமையநல்லூர் |
| 36. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 37. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 38. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 39. J. விக்டர் சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 40. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 41. Mrs. ரூபிஜெயாசேகர் | - கலுங்குவிளை |

## வேத அறிவுப்போட்டி எண் 221ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. S. ஜாய்ஸ் சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 2. Mrs. ஜாய் மேத்யூ | - வி.கே.புரம் |
| 3. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 4. Mrs. ஜெனிதர்மராஜன் | - திருநெல்வேலி |
| 5. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 6. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 7. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 8. Mrs. ஃபுளோராஎழில் | - ஆம்பூர் |
| 9. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 10. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 11. Mrs. ரத்தினாபாய்பிரசாத் | - மதுரை |
| 12. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 13. K. ராணி | - தூத்துக்குடி |
| 14. K.M. சாந்தி | - வாடிப்பட்டி |
| 15. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 16. Mrs. தேவதாதேவப்பிரியம் | - சென்னை |
| 17. T. ராஜாத்தி | - கோம்பை |
| 18. Mrs. தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 19. Mrs. கிறிஸ்டோபல் | - கோவை |
| 20. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 21. R. ஜெபக்கனிமார்க்ஸ் | - கூமாபட்டி |
| 22. Mrs. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 23. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 24. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 25. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 26. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 27. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 28. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 29. T. ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 30. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 31. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 32. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 33. B. ஞானதீபம் அருள்ராஜ் | - திருநெல்வேலி |
| 34. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 35. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 36. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 37. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 38. E. அதிசயம் | - பனைகுடி |
| 39. E. ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 40. N. ஜெபத்தாய் | - நாசரேத் |
| 41. J. ஜாய்கமலம் | - நாசரேத் |

தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி.3:16,17) என வேதம் கூறுகிறது. ஆம், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்வீர்களானால் ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாகிய அவர் உங்களில் வாசம்பண்ணுவார். அவர் உங்களில் வாசம்பண்ணுகிறபோது நீங்கள் தேவன் தங்கும் ஆலயமாகிறீர்கள். தேவனுடைய ஆலயமாகிய நீங்கள், இன்னும் சந்தேகங்கொண்டு தேவனை மரித்தோரிடத்தில் தேடாமல், ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களோடேகூட தேடி அவரைக் கண்டுகொள்ளுங்கள்.

தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். நீங்கள் அவருக்காக எப்பேர்ப்பட்ட ஆலயத்தைக் கட்டப்போகிறீர்கள் என வேதம் கேள்வி எழுப்புகிறது. அப்படியிருக்க தேவனைக் காணும்படி புண்ணிய ஸ்தலங்களுக்கும், தேவாலயம் என அழைக்கப்படுகிற பெரிய பெரிய கட்டடங்களை நோக்கியும் நீங்கள் செல்வீர்களானால் உங்களை நீங்களே வஞ்சிக்கிறவர்களாயிருப்பீர்கள். காலத்தை விரயமாக்காதீர்கள். நிச்சயமாகவே அங்கே தேவன் இல்லை. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்,அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி.3:20) என்று உங்கள் இதயக் கதவை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடுத்து அவர் வந்து உங்களில் வாசஞ்செய்ய இடங்கொடுத்தால் அங்கே இயேசுவைக் காண்பீர்கள். இயேசுவுக்கு என் இதயத்தில் இடங்கொடுத்து எந்த சமாதானத்தைப் பெற்றேன் என்பீர்களாகில் நீங்கள் அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது குறித்தும், அவர் உயிர்த்தெழுந்து உங்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறார் என்பது குறித்தும் சந்தேகப்படுகிறீர்கள் என்று தான் அர்த்தம். அன்றைய நாளில், அப்போஸ்தலர்களும், சீஷர்களும் இயேசுவை உயிர்த்தெழுந்தவராகக் கண்டோம் என்று பல முறைகூறியும் அநேகர் சந்தேகங்கொண்டனர். அவர்கள் சந்தேகங்கொண்டதினால் இயேசு உயிர்த்தெழுந்து, அவர் நாமத்தில் கூடினவர்கள் மத்தியில் இருந்ததும், இருப்பதும் பொய்யாகிவிட்டதா? ஏமாந்து போகாதீர். தேவனைத் தேட வேண்டிய இடத்தில் தேடி அவரைக் கண்டு பணிந்துகொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவோடு நித்திய நித்தியமாய் வாழும்படி அவரை விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொண்டு, அவருக்காய் காத்திருப்போரை அழைத்துச்செல்ல இயேசு மீண்டும் வருகிறார். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடிருப்பது எவ்வளவு உண்மையோ அந்த அளவிற்கு அவர் மீண்டும் வரப்போவதும் உண்மை, உண்மை,உண்மை. அவரை சந்தித்து எதிர்கொண்டு போக ஆயத்தப்படுவோமாக!

அவர் நாமத்தினாலே கூடியிருக்கிறவர்கள் மத்தியிலும், அவரை தன் சொந்த இரட்சகராக தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு இப்பூமியில் வாழுகிறவர்கள் மத்தியிலும், தேவன் இருக்கிறார். "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). மரித்தோரிடத்தில் அல்ல!



கர்த்தருக்கு ஊழியஞ்செய்து, அவருடைய சுவிசேஷத்தைப் பரப்புகிறவனாகக் கழித்தான்.

ஆனால் அவன் ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அவனுடைய நாட்கள் எப்படியிருந்தது? அவன் தான் செய்தவற்றில் நேர்மையுள்ளவனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருந்தானா? இவையெல்லாவற்றையும் அவன் ஏன் செய்தான் என்பதை அவனே விளக்குகிறதை கேட்போம். அவன், "முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்கவெறிகொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்" (அப்.26:9-11) என்றான்.

அந்நாட்களில் சவுல் சபையைத் துன்பப்படுத்தின போது அவன் நல் மனசாட்சியுடையவனாக இருந்திருக்கிறான் என்று இவைகளெல்லாம் கூறுகிறது. அவன் என்ன செய்து கொண்டிருந்தானோ, அவற்றில் அவன் நேர்மையுள்ளவனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருந்தான். அவன் தான் செய்துகொண்டிருந்தவற்றைக் குறித்து நல்லதென்று உணர்ந்தவனாக சந்தேகங்கொள்ளாதிருந்தான். ஆனால் உண்மையென்னவென்றால், அவனுடைய மனசாட்சி தேவன் அவன் செய்யும்படி விரும்பியவற்றின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவன் தான் சரியென்று நினைத்தவற்றின் அடிப்படையிலேயே செயல்பட்டுக் கொண்டிருந்தான். அவன் சத்தியத்தைக் கற்றுக்கொண்ட பிற்பாடே, அவன் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தவனாக, தேவனுக்கு உகந்தவனாக மாறினான்.

சவுலுடைய மனந்திரும்புதலுக்குப் பிறகு அவனுடைய பெயர் பவுல் என மாற்றப்பட்டது அதற்கு பிறகு அவன், " என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன். நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1தீமோ.1:12-17) என்றான்.

முன்னதாக உள்ள வேதவாக்கியத்தில் பவுல் தேவனுக்கு முன்னே எல்லா விஷயங்களிலும் நல்மனசாட்சியோடே நடந்துவந்த நாட்கள் வரைக்கும்

நினைவுப்படுத்தப்படுகிறான் என நான் நினைக்கிறேன் (அப்.23:1) மேலும் அது வரை அவன் தேவனோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவோடும் போரிட்டும், கர்த்தருடைய ஜனங்களைத் துன்புறுத்திக்கொண்டும் தன்னுடைய முந்தைய நாட்களைக் கழித்திருக்கிறான். சத்தியத்தைக் கற்றுக் கொண்டபோதும் தான் ஒரு கிறிஸ்தவனாக மாறும்படிக்கு தேவனுக்குக் கீழ்ப்படிந்த போதும், அவன் தேவனுடைய இரக்கமும் கிருபையும் உண்மையாகவே மிகப்பெரிது என்றும் தான் இரட்சிக்கப்படுவதற்கு பாவிகளில் பிரதான பாவி தான் என்பதையும் உணர்ந்து கொண்டான். அவன் தன்னுடைய கடந்த காலத்தை ஒருபோதும் மறக்கவில்லை. ஆனால் தன்னுடைய மீதியான நாட்களில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி பந்தையப்பொருளுக்காக முன்னானவைகளை நாடி கடந்த காலத்தை ஈடு செய்யும்படிக்கு அவருடைய பலத்தினாலே எல்லாவற்றையும் செய்யவே இதை அனுமதித்தான்.

என்னுடைய சிநேகிதரே, தேவன் ஒரு மனிதன் நல்மனசாட்சி கொண்டவனாயிருப்பதையே எதிர்பார்த்திருப்பாரானால், எல்லா சமயத்தினரும் நல்மனசாட்சியினை உடையவராயிருந்து இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். இதைப் போல எல்லா சபையினரும் இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டாலும் விசுவாசம் கொண்டிராவிட்டாலும் அவர்கள் இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். இது ஒரு மனிதன் சன்மார்க்கமான வாழ்வின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முடியும் என அர்த்தமாகிவிடும் அல்லது வெறுமனே நற்கிரியையின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டு விடமுடியும் என அர்த்தமாகிவிடும். இது ஒருவன் கிறிஸ்தவனாகவோ அல்லது கிறிஸ்தவனல்லாதவனாகவோ, ஒருவன் சபை அங்கத்தினனாகவோ அல்லது அங்கத்தினனல்லாதவனாகவோ, அல்லது ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனோ அல்லது விசுவாசமற்றவனோ எப்படியிருந்தாலும் ஒன்றுமில்லை, எல்லா ஜனங்களும் பொதுவாக தங்களுடைய சுய எண்ணத்தை, செயல்களை, சமயத்தை, மற்றும் அநேக காரியங்களை நியாயப்படுத்தும் சுபாவமுடையவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய மனசாட்சியை பொசுக்கி அல்லது அது அவர்களை தொடர்ந்து இனி குத்திக்கொண்டிருக்கவில்லை என தேவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல்படலாம் (1தீமோ.4:1-5). இது கடைசியாக ஒரு நல் மனசாட்சியை உருவாக்கலாம்.

ஒரு நல்மனசாட்சி மட்டுமே இதன் பதிலல்ல. ஒருவனுடைய இரட்சிப்பிற்கு அது உத்தரவாதமல்ல. ஒருவன் தேவசித்தத்தின் ஞானத்தின் மேல் அடித்தளமிட்டு சரியானபடி வாழ்கிறவனாயிருக்கும் போது தன்னுடைய மனசாட்சியின் மேல் நம்பிக்கை வைக்கமுடியும். ஏனென்றால் ஒருவனுடைய நினைவுகள், செயல்கள், நேர்மையான வாழ்வு போன்றவை தேவனுடைய வார்த்தையினால் ஆளப்படுகிறது. மனசாட்சியானது தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்படுகின்றபோது மட்டுமே ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும். அல்லது இன்னொரு வழியில் இதைக் குறிப்பிட்டால் ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதை விசுவாசிக்கும் போதும் அதன்பின் அவனுடைய மனசாட்சி அவனை குத்தும் போதும், அவன் தேவனுடைய போதனைக்கு விரோதமாக செயல்படும் போது அல்லது கர்த்தர் எதிர்பார்க்கிறபடி வாழாதிருக்கும்போது அவனுடைய மனசாட்சி உயிரோடும் செம்மையாகவும் இருக்கிறது என இது அர்த்தமாகிறது.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கியுள்ளது, இது உண்மை, இது சரியானது. இப்போது நாம் ஆவியானவரால் கொடுக்கப்பபட்டுள்ள





பெண்கள் பகுதி

## அவர் இங்கே இல்லை.

## He is not here.

*-Glory Arjunan*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்று கல்லறையில் இல்லை. அவர் மரித்தோர் இருக்கிற இடத்திலும் இல்லை. அப்படியானால் அவர் எங்கேயிருக்கிறார்?

அன்று மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் இயேசுவைத் தேடி கல்லறைக்குச் சென்றனர். அப்போது ஒரு தூதன் சிலுவையில் அறைப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை என்றான் (மத்.28:5,6). மேலும் அவன் அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள் என்றான் (மத்.28:7). இயேசுவும்கூட என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார் (மத்.28:10). அப்படியே 'பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள், சிலரோ **சந்தேகப்பட்டார்கள்'** (மத்.28:16). மேலும் மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் கர்த்தர் தரிசனமானார். அவள் சீஷர்களிடத்தில் போய் அந்த செய்தியை அறிவித்தாள். அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது **நம்பவில்லை.** அதன்பின் அவர்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிற பொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார். அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; **அவர்களும் நம்பவில்லை.**

அன்பு சகோதரிகளே, இன்றைய நாளிலும் கூட அநேகர் இவ்வாறு நம்பாதவர்களாகவே இருக்கின்றனர். இயேசு சொன்னதையும் தூதன் சொன்னதையும் நம்பினவர்கள் அவரைக் கண்டார்கள். அதுவும் இயேசுவின் நாமத்தில் விசுவாசம் கொண்டிருந்த ஒருமனமுள்ளவர்களாகிய அந்த சீஷர்கள் அவரைக்கண்டார்கள். முன்னே தியானித்த வசனத்தில் அவருடைய நாமத்தில் கலிலேயாவில் ஒன்றுகூடினவர்கள் அவரைக் கண்டு பணிந்துகொண்டார்கள் எனக் கண்டோம். ஆம், அன்பானவர்களே, இன்னும் நீங்கள் இயேசுவே மெய்யான தேவனும், நித்தியஜீவனுமாயிருக்கிறார் (2யோவா.20) என்று நம்பவில்லை என்றால் நிச்சயமாகவே அவரைக் காணமாட்டீர்கள். இயேசுவின் நாமத்திலே கூடியிருக்கிறவர்களிடத்திற்குச் சென்று அவர்களோடே கூட நீங்கள் இயேசுவைக் கண்டுகொள்ளுங்கள். மாம்சபிரகாரமாக அல்ல.

மேலும் தேவனைக் காணமுடியாத எத்தனையோ ஸ்தலங்களுக்குச் சென்று தேவனைத் தேடிக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதரியே, உங்களுக்குச் சொல்லுகிறேன்,நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தால் நீங்களே தேவனுடைய ஆலயம். ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்;

## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

Evangelizing Our Friends -TVOTI



### அன்பு உங்கள் நண்பர்களுடன் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்

**பிரிவு 1, பாடம் -8**

Love Must Be Practiced with Your, Friends

**மனப்பாட வசனம்:**

**(யோவான்4:16 NKJV) "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்"**

**முன்னுரை:**

இயேசு 'எந்தக் கற்பனை பிரதானமானது" என்ற வினாவிற்று பதிலளிக்கையில் "....உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்" (மத்.22:37-40). மனுஷர் தேவசாயலில் உருவாக்கப்படுகையில் (ஆதி.1:27), நாம் தேவனிடத்தில் அன்பு கூரவும் பிறனிடத்தில் அன்புகூரவும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார். யோவான், "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1யோவா.4:16). என்றெழுதியுள்ளார். நாம் எப்போதும் நம் நண்பர்களுடன் அன்புகூர பழக்கப்படுத்திக்கொள்வது சரியாதாகும். பவுல் அன்பு என்பது ஆவியின் கனிகளில் ஒன்று என்றும் அதற்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை என்றும் கூறுகிறார் (கலாத்.5:22-23).

யாரோ ஒருவர் நம்மேல் அன்பு காட்டும் போது நாமனைவரும் அதைப் புரிந்துகொள்கிறோம். யாரோ ஒருவர் உன் மேல் அன்பு காட்டிய அந்த நேரம் உனக்கு நினைவிருக்கிறதா? அந்த நேரம் உன் வாழ்வில் ஒரு மகிழ்ச்சியான நேரமாயிருந்ததா? ஒருவேளை அந்நேரம் உன் பிறந்தநாள் விருந்து அல்லது குடும்ப உல்லாச பிரயாணமாக இருந்திருக்கலாம். அது ஒரு கஷ்டமான நேரமாக இருந்ததா? அது ஒருவேளை நீ உன் பள்ளியில் செய்யவேண்டியதைச் சிறப்பாக செய்யாத நேரமாகவோ அல்லது நீ நேசித்த ஒருவருடைய மரணத்திற்குப் பின்னான ஒரு நிகழ்வாக இருந்திருக்கலாம். இது எப்பேர்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் கவலையில்லை, ஏனென்றால் நாம் எல்லா நேரங்களிலும் மற்றவர்களை நேசிக்க முடியும்! சாலொமோன், "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான். இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்" (நீதி.17:17) என்றெழுதினான். நம்முடைய நண்பர்கள் மீது நமது அன்பைக் காட்டுவது நமது வாழ்வில் தேவனுடைய சித்தமாயிருக்கிறது, நம்முடைய நண்பர்களும் அதன் மதிப்பை நன்கு உணர்ந்து கொண்டு அவற்றால் உற்சாகமடைவார்கள்.

**-தொடரும்**



அந்த வார்த்தைக்கேற்ப ஜீவிக்கும் போது, அதாவது, நாம் கர்த்தருடைய போதனையோடு ஒத்துப்போகிறவர்களாயிருக்கிறோம் என ஆவியானவரின் வார்த்தை ஏற்றுக்கொள்கிறது அதன்பின் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என அறிந்து கொள்வோம். எனவே பவுல் சொல்கிறான், அவன் சொல்வதை கவனியுங்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோம.8:16). வேறொருவகையில், ஆவியானவரின் வார்த்தை, தேவனுடைய வார்த்தை, ஒரு காரியத்தை சொல்கிறது அல்லது குறிப்பிட்ட காரியங்களைப் போதிக்கிறது, மேலும் நாம் அதற்குக் கீழ்ப்படியத்தவறும் போது அல்லது கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறபடி ஜீவிக்க முற்படும்போது, இது ஆவியானவர் வார்த்தையின் மூலம் திருவுளம் பற்றுகிறார் எனப் பொருள்படுகிறது, அல்லது இது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கவில்லை அல்லது கர்த்தர் நாம் செய்யும்படி எதிர்பார்த்திருந்தவற்றிற்கு கீழ்ப்படியாதவர்களாயிருக்கின்றோம் என அறிவிக்கின்றது.

அப்படியானால் நல்ல எண்ணங்கள் அல்லது நல்மனசாட்சியை மட்டும் கொண்டிருத்தல் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றோ அல்லது நாம் தேவனுடைய பிள்ளைகளாகயிருக்கிறோம் என்றோ நிரூபிக்கின்றதில்லை. தயவு செய்து கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உத்தரவிட்டுள்ள வழியைத் தவிர வேறு எந்த வழியிலும் நீங்கள் இரட்சிக்கப்பட முடியுமென நினைத்து வஞ்சிக்கப்பட்டுவிடாதீர்கள். நிச்சயமாக, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதற்கு நாம் கீழ்ப்படியத்தவறினால், இது நம்முடைய மனசாட்சி உயிர்வாழ்ந்து கொண்டிருக்குமானால், இது தேவன் சொல்லியிருக்கிறகாரியம் நமக்குரியதானால், நம்முடைய மனசாட்சி நம்மை உணர்த்தும் மற்றும் அது அவ்வாறு உணர்த்த வேண்டும் என்று பொருள்படுகிறது. நாம் தேவனோடு காரியங்களை சரியாக உருவாக்க வேண்டுமென்று இது ஒரு சிறந்த நினைப்பூட்டுபவையாக இருக்கிறது. நாம் அதைச் செய்யும் போது, நாம் அவருடைய சித்தத்தோடு ஒருமித்துதிருக்கிறோம் என அறிகிறோம், இது நல்ல எண்ணங்களை, நல்மனசாட்சியை உருவாக்குகிறது, ஆனால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறோம் என்ற அடிப்படையிலும் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் என்ற அடிப்படையிலும் மட்டுமே இருக்கவேண்டும். இந்த அறிவின் அடிப்படையில் நாம் ஒரு நல்லமனசாட்சியை பெற்றிருக்க வேண்டும், இதன் மூலம் மட்டுமே நாம் சந்தோஷமாக இருக்க முடியும்.

நீங்கள் நல்மனசாட்சியுடையவர்களாயிருக்கிறீர்களா? தேவனுடைய சித்தத்தை அறிவீர்களா? அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா? இல்லையென்றால், உங்களுடைய மனசாட்சி உங்களை குத்திக் கொண்டிருக்கிறதெனவும் மேலும் அது கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படியும் வரையும் தொடர்ந்து குத்திக்கொண்டிருக்குமெனவும் நாம் நம்புகிறோம். கிறிஸ்துவை விசுவாசிப்பீர்களென்றால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சித்து, உங்களை தம்முடைய பிள்ளையாகவும் தம்முடைய குடும்பமாகிய சபையில் ஒரு அங்கத்தினனாகவும் ஆக்குவார் (மாற்.16:16, அப்.2:38; கலா.3:26,27; அப்.2:47). இதை நீங்கள் செய்வீர்களென்றால் நீங்கள் நல் மனசாட்சியை பெறமுடியும், அதில் உங்களுக்கென்றுள்ள கர்த்தருடைய சித்தத்தை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.



## நல்லவராய் இருப்பதே நன்று

பெண்கள் பகுதி

Being "Good" is Good Enough

-Betty

எல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் **நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க** முயற்சிக்கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?

அதிகமாக ஜனங்கள் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் **அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள்.** எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்படியும்படிக்கு தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் **அறியாதவர்களாகவே** இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? "உண்மையாகவே, இந்த அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்;** மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே ...."(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மைக் கேட்டுக் கொண்டதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் என தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக **அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.** அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிக்கட்டும்.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்"(யோவா.12:48) என எச்சரித்தார். **நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!**

ஆனால் நாம் நம்முடைய சுயநீதி ஜீவியத்தினால் இரட்சிப்படைய முடியாது ரோம.3:10,23, "அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி",எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2–ல், "இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது;**



**உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது**" என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற "நற்குணம்" எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

**இதற்குப் பரிகாரம் என்ன?**

நாம் 1பேது.2:21–25–ல்"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், **கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு**, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப்போனார். 'அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை'(ஏசா.53:9). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, **அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்"என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, "**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு,** பாவம் அறியாத அவரை **நமக்காகப் பாவமாக்கினார்**" என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாகயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று..." ரோம.6:6 விளக்குகிறது.

எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்துவிக்கப்படுகிறோம்? "... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்"(ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், **திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள்.** இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.